# 3 சமய வாழ்வில் ஒழுக்கம்

சமயம் என்றால் வாழும் முறை அல்லது வாழ்க்கை நெறி எனப்படும். மனித வாழ்வானது உயர்வானதும் அரிதானதும் ஆகும். நாம் அத்தகைய வாழ்வின் அருமையை உணர்ந்து, வாழ்வின் பல்வேறு கட்டங்களிலும் சமய ஒழுகலாறுகளையும் வழக்காறுகளையும் கடைப்பிடிக்க வேணடும். எமது சமய நெறிமுறைகள் மனிதனை வாழ்வாங்கு வாழச்செய்கின்றன; அவனைப் பண்படுத்துகின்றன; இறைவனை அறியும் உயர்நிலைக்கு இட்டுச் செல்கின்றன.

**'மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்**
**எண்ணில் நல்லகதிக்கு யாதுமோர் குறைவில்லை'**

என சம்பந்தர் ஒழுக்க வாழ்வைக் குறிப்பிடுகின்றார். சைவநெறிமுறைக்கு உட்பட்ட வாழ்வானது ஓர் ஒழுங்குக்கு உட்பட்டதாக அமையும்போது அது ஒழுக்க நிலைக்கு உரியதாகவும் அமைகின்றது. சைவநெறியில் வாழ்வாங்கு வாழ்கின்ற, முறையான வாழ்க்கை நெறியாக ஒழுக்கம் அமைந்துள்ளது. இங்கு உயர்வான வாழ்க்கை என்பது ஒழுங்குக்கு உட்பட்டதான அறவாழ்க்கையையே குறிக்கின்றது. அறம் அல்லது ஒழுக்கம்தான் வாழ்க்கையை பூரணத்துவமாக்கும் என அறிஞர் கூறுவர். சைவ சமயம் இறைவன் மீது பக்தி கொள்ளுதலையும் வலியுறுத்துகின்றது. சமய வாழ்வில் பக்தி என்பது ஒரு நெறி. அது தன்னை அறிவதுடன் இறைவனையும் உணர வழிகாட்டுகிறது.

**''ஒழுக்கம் இல்லான் கண் உயர்வு இல்லை''**என்றும் **''ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை''** என்றும் **''ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப் படும்''** என்றும் **''பொய்தீர் ஒழுக்க நெறி நின்றார் நீடுவாழ்வார்''** என்றும் சுட்டி நிற்கும் பொய்யா மொழிப் புலவன் கூற்றுக்கள் ஒழுக்கத்தின் சிறப்பினை எடுத்தியம்புகின்றன. சமய வாழ்விலும் இதுவே அச்சாணியாக அமைகின்றது. உயிரை இழந்தவன் சடமாகின்றான். இவ்வாறு ஒழுக்கத்தின் சிறப்பை உணர்த்த முயன்ற வள்ளுவர், உயிரிலும் மேலானதாக ஒழுக்கத்தைக் குறிப்பிடுவது இதன் முக்கியத்துவத்தை உணர்த்துகின்றது.

சைவசமயி ஒருவனிடத்தில் தியாக மனப்பாங்கு, ஏழைகளுக்கு இரங்குதல், பிறரில் நிறை காணுதல், பிறரை நேசித்தல், பிறரின் கஷ்டங்களுக்காகப் பிரார்த்தித்தல் முதலான நற்பண்புகள் காணப்படும். இத்தகைய பண்புள்ளவர்கள் அன்பு, இனிமை, சாந்தம், அமைதி ஆகிய மனிதநேயப் பண்புகளையும் கொண்டிருப்பர்; இறையருளுடன் பிறருடைய துன்பங்களைத் துடைப்பதிலும் முன்னிப்பர். ஆதலால், நாமும் எமது வாழ்வில் மனிதநேயப் பண்பினைக் கடைப்பிடித்தல் அவசியமானது. முக்கியமாக சுயநலத்தைக் குறைத்து, பொதுநலத்தை வளர்த்தல் சமயத்தின் உண்மை நிலைப்பாடாகும். இதனையே,

**''எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே**
**அல்லாமல் வேறொன்றும் அறியேன் பராபரமே''** என்றும்

**''அன்பர் பணி செய்ய எனை ஆளாக்கிவிட்டால்**
**இன்ப நிலை தானே வந்தெய்தும் பராபரமே''** என்றும்

தாயுமானவர் பாடுகின்றார். திருவள்ளுவர் திருக்குறளில், பிறரின் துயரைத் தன் துயராகக் காண்கின்ற நற்பண்பினைப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

**''அறிவினான் ஆகுவதுண்டோ பிறிதின்நோய்**
**தம் நோய்போல் போற்றாக் கடை''**

பிறர்க்கு இரங்குவதும் உதவுவதுமான மனிதநேயப் பண்பினைக் கந்தபுராணம் சிறப்பித்துக் கூறுகின்றது.

**''ஏவர் எனினும் இடருற்றனராகி**
**ஓவில் குறையொன்று உளரேல் அது முடித்தற்கு**
**ஆவி விடினும் அறனே''**



இலவச விநியோகத்திற்காக

பட்டினத்தார் நாம் செய்யக்கூடிய நற்செயல்களைப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

**"ஒன்றென்றிரு தெய்வம் உண்டென்றிரு உயர்செல்வமெல்லாம்**
**அன்பென்றிரு பசித்தோர் முகம்பார் நல்லறமும் நட்பும்**
**நன்றென்றிரு நடு நீங்காமலே நமக்கிட்டபடி**
**என்றென்றிரு மனமே உனக்குபதேசமிதே"**

நாவுக்கரசரும், **"என்கடன் பணி செய்து கிடப்பதே"** என்று பாடுவதனூடாக, சமய, சமூகப் பணியின் முக்கியத்தைக் குறிப்பிடுகின்றார். நாம், **"மக்கள் சேவையே மகேசன் சேவை"** என்ற உயர் தத்துவத்தை என்றென்றும் மனத்தில் கொள்ள வேண்டும். நாம் மக்கள் ஒவ்வொருவர் ஊடாகவே இறைவனைக் காண்கிறோம். நாம் நல்லன செய்திட வேண்டும்; அதனை நன்றே இன்றே செய்திடுவோம். தனிமனித மேம்பாடும், அதனை அடைவதற்கு மார்க்கமாக அமைகின்ற மானிட சேவையும் எம்மை நல்லவர்களாக மாற்றி விடட்டும்

நாம் அனைவரும் கடவுளுடைய குழந்தைகள். எமக்குள்ளே பேதமில்லை. ஒருவருக்கொருவர் அன்புடனும், கருணையுடனும், நட்புடனும் பழகும்போது குடும்ப, சமூக ஒருங்கிணைப்பு ஏற்படும். மேற்கூறிய நல்லொழுக்கப் பண்புகள் தனி மனிதனை மனிதநேயம் உள்ளவனாக மாற்றுகின்றன. ஏழை எளியவர்க்கு இரங்கும் தியாக மனப்பாங்கையும், பிறரில் நிறை காணுதல், பிறரை நேசித்தல் முதலான பண்புகளையும் வளர்க்கின்றன. இவற்றுடன் பிறரின் கஷ்டங்களுக்காகப் பிரார்த்திக்கும் பண்பும் வளர்ச்சியடையும். இவ்வாறு வளர்க்கப்பட்ட பண்பானது உலகம் தழுவிய அன்பாக மாற்றம் அடையும். அதுவே, **"யாதும் ஊரே; யாவரும் கேளிர்"** என்ற சர்வதேச சகோதரத்துவத்தை ஏற்படுத்தும்.

**"இன்பமே சூழ்க; எல்லோரும் வாழ்க"**

**01. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. சைவசமயி ஒருவனிடத்தில் இருக்க வேண்டிய நற்பண்புகள் நான்கினைக் குறிப்பிடுக.
2. பக்தி என்பதற்கு விளக்கம் தருக.
3. **"என்கடன் பணி செய்து கிடப்பதே"** எனப் பாடியவர் யார்? அத் தேவாரத்தை எழுதுக.
4. நீங்கள் பிறருக்காகச் செய்ய நினைக்கும் சேவைகளைக் குறிப்பிடுக.

## செயற்பாடு

1. ஒழுக்கத்தின் சிறப்பினை எடுத்துக்காட்டும் நூலாதாரங்களைத் தேடித் தொகுத்து, அவற்றை வகுப்பறையில் காட்சிப்படுத்துக.
2. சமய ஒழுக்கத்தின் முக்கியத்துவம் பற்றி வகுப்பறையில் பேசிக்காட்டுக.
3. வாழ்வில் மனிதநேயப் பண்பினைக் கடைப்பிடித்தல் அவசியமானது - இவ்விடயம் தொடர்பாக கட்டுரை ஒன்றினை எழுதி வகுப்பறையில் காட்சிப்படுத்துக.

## பாடச்சுருக்கம்

- சைவசமய நெறிமுறைகள் மனிதனை வாழ்வாங்கு வாழச் செய்கின்றன; அவனைப் பண்படுத்தி, இறைவனை அறியும் உயர்நிலைக்கு இட்டுச் செல்கின்றன.
- சைவசமயி ஒருவனிடத்தில் தியாக மனப்பாங்கு, ஏழைகளுக்கு இரங்குதல், பிறரில் நிறை காணுதல், பிறரை நேசித்தல், பிறரின் கஷ்டங்களுக்காகப் பிரார்த்தித்தல் முதலான நற்பண்புகள் காணப்படும்.
- எமது வாழ்வில் மனிதநேயப் பண்புகளைக் கடைப்பிடித்தல் அவசியமானது.
- நாம் உலகம் தழுவிய அன்பினை வளர்த்துக் கொள்வோம்.


இலவச விநியோகத்திற்காக